செய்தி வெளியீடு எண் : 1299 நாள் : 03.07.2023

**மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் தமிழ்நாட்டின் சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள கனமழை எச்சரிக்கை குறித்து மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வினை காணொலி காட்சி மூலமாக நடத்தினார்.**

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் மாண்புமிகு நிதி, மின்சாரம், மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர், நீலகிரி, திருப்பூர், தேனி, மற்றும் திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களிலும் மற்றும் தமிழ்நாட்டின் இதர பிற மாவட்டங்களிலும் மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களிடையே விரிவான ஆய்வினை காணொலி காட்சி மூலமாக மேற்கொண்டார்.

அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களும் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயல்படுமாறும், தேவையான JCB வாகனங்கள், தளவாட பொருட்கள் மற்றும் உபகரணங்களை முன்கூட்டியே தயார் நிலையில் வைத்துக் கொள்ளுமாறும், பணியாளர்களுக்கு தேவையான அனைத்து பாதுகாப்பு உபகரணங்களையும் அளித்து பாதுகாப்பான முறையில் மின்கட்டமைப்பை சீர்செய்யும் பணியில் ஈடுபடுமாறும், தேவைப்படின் அருகாமையில் உள்ள மின்பகிர்மான வட்டங்களிலிருந்து பணியாட்களை பணியில் ஈடுபடுத்துமாறும், அனைத்து வாரிய வாகனங்களையும் தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார்.

சீரமைப்பு பணிகளில் ஈடுபடும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மிகுந்த கவனத்துடனும், உரிய பாதுகாப்புடனும் செயல்படுமாறு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், இத்தகைய இயற்கை இடர்பாடுகளின் போது மாவட்ட நிர்வாகத்தினருடன் எப்போதும் தொடர்பில் இருக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால் முன்னுரிமை அடிப்படையில் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் குடிநீர் இணைப்புகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட அனைத்து மேற்பார்வை பொறியாளர்களும் தமது அலுவலகங்களில் இதற்கென தனியாக குழு அமைத்து எடுக்கப்பட வேண்டிய

நடவடிக்கைகள் குறித்தும், சேதாரங்கள் குறித்தும் ஆய்வு செய்து உடனடியாக அனைவருக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மழைக்காலங்களில் பொதுமக்கள் மின்சாதனங்களை எச்சரிக்கையுடன் கையாளுமாறும், அறுந்து கிடக்கும் மின் கம்பிகளின் அருகில் செல்ல வேண்டாம் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தின் வரும் நாட்களில் எதிர்பார்க்கப்படும் கனமழை எதிர்கொள்வதற்காக கீழ்க்கண்ட தளவாட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளன:

1. கையிருப்பில் உள்ள மின் கம்பங்கள் : 3,00,483 எண்ணம்
2. கையிருப்பில் உள்ள மின் கம்பிகள் : 22,209 கி. மீ.
3. கையிருப்பில் உள்ள மின்மாற்றிகள் : 18,395 எண்ணம்
4. தயார் நிலையில் இருக்கும் நீர் இரைக்கும் பம்புகள் : 90 எண்ணம்
5. தயார் நிலையில் இருக்கும் டீசல் ஜெனரேட்டர்கள் : 396 எண்ணம்
6. அவசரகால மின் விளக்குகள் : 3,586 எண்ணம்
7. தயார் நிலையில் உள்ள லாரி/கிரேன் லாரிகள் : 223 எண்ணம்
8. எரிவாயு வெட்டும் இயந்திரம் : 16 எண்ணம்
9. வெல்டிங் இயந்திரம் : 21 எண்ணம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) திரு.இரா.மணிவண்ணன், தொடர்புடைய தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in